**உயர்நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையிம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உயர்நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பொன்று உள்ளடங்கலாக, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் 1971 இன் 38 ஆம் இலகக நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- சபை தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- சபையின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு

“சிறப்பாகத் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிலையத்தினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| சம்பந்தப்பட்ட நியமங்களின் அவதானிப்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முழுதாக தேய்மானத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் மேற்கொண்டும் பாவனையில் ஈடுபடுத்தப்படுகின்ற ரூபா 5,006,511 க்கான 03 மோட்டார் வாகனங்களின் பயன்தரும் ஆயுட்காலம் பற்றியதான மதிப்பீட்டினை இலங்கை பொதுப் பிரிவு கணக்கீட்டு நியமம் 03 பிரகாரம் மீண்டும் மீளாய்வு மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உயர்நீதிமன்றத் தொகுதி முகாமைத்துவ சபையுடன் தொடர்புடைய 03 மோட்டார் வாகனங்கள் தற்போது அன்றாட கடமைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்றன. அதில் ஒரு வாகனம் 2021 ஆம் ஆண்டு விலைமனு கோரப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. மோட்டார் வாகனங்களின் பயன்தரும் ஆயுட்காலம் 04 வருடமாகும். அதன்படி மோட்டார் வாகனங்களின் பயன்தரும் ஆயுட்காலம் தற்போது முடிவடைந்துள்ளது. அதனால் அவ்வாகனங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்வதற்கு உயர்நீதிமன்ற தொகுதி நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுப் பிரிவு கணக்கீட்டு நிமயங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிரந்தர சொத்துக்களை வகைப்படுத்தப்பட்டு இனங்காண்பது தொடர்பாக கணக்குக் கொள்கையொன்று இல்லாமையினால் இன்வென்ற்றி பொருட்களாக கருதப்பட வேண்டி இருந்த கிரயம் முறையே ரூபா 1,324,156 மற்றும் ரூபா 2,392,394 க்கான உபகரணங்கள் மற்றும் | கருவிகள், உபகரணங்கள் மற்றும் வீட்டு உபகரணங்கள் நிரந்தர சொத்துக்களின் கீழ் கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிரந்தர சொத்துக்கள் மற்றும் இன்வென்ற்றி பொருட்கள் சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

வீட்டு உபகரணங்கள் நிரந்தர சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

### 1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்று இல்லாமை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| நிரந்தர சொத்துக்கள் | 63,522,545 | ஆவணங்கள் அல்லது விபரமான அட்டவணைகள் | இனங்காணப்பட்ட மீதிகளுக்கான அட்டவணையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்களின் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள் பிரமாணம் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 371(2) | 05 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், மொத்த ரூபா 96,345 க்கான முற்பணத்தினை முடிப்பதற்கு 19 முதல் 72 தினங்கள் தாமதிக்கப்பட்டிருந்தன. | நாட்டில் நிலவும் கொவிட் 19 நிலைமையினால் மீளாய்வாண்டில் ஊழியர்களை நிறுவனத்திற்கு வரவழைப்பது தொடர்மாற்று முறையில் மேற்கொள்ளப்பட்டது. அவ்வேளை முற்பணம் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்களுக்கு அப்பணத்தினை மீள் செலுத்தி முடிப்பதற்கு முடியாதிருந்தது. ஆகையால் அந்த உத்தியோகத்தர்கள் | தாமதப் படுத்தாது முற்பணத்தினை கட்டி முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மீண்டும் கடமைக்கு வந்ததன் பின்னர் முற்பணத்தினை மீள் செலுத்தப்பட்டிருந்தமை யினால் இத்தாமதம் நேர்ந்திருந்தமையினை அறியத்தருகின்றேன். | |
| (ii) | நிதிப்பிரமாணம் 454 மற்றும் 751 | கொள்வனவு மற்றும் வழகலினை பொருட் ஜாபிதா ஏட்டில் முறையாக உட்படுத்தப்பட்டிருக்கா மையினால் தொகை புத்தக புத்தக மீதி மற்றும் உண்மையான மீதிகளுக்கிடையே 05 வகையான பொருட்களின் 64 அலகுகளுக்கான மிகையும் மற்றும் 03 வகையான பொருட்களின் 20 அலகுகளுக்கான குறைபாடுகளும் இருந்தன. | 2020 திணைக்கள பொருட் கணிப்பு குழுவினால் 04 உருப்படிகள் உபயோகமற்ற (பொது 47) பொருட்களுக்குள் புகுத்தப்பட்டிருந்தன. ஏனைய குறைபாடுகள் மற்றும் மிகைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளினர் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை சமர்ப்பிக்கின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் புத்தக மீதி மற்றும் உண்மையான மீதி சீராக்கப்படல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 880 | பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு அமைய பிணை வைக்கப்பட வேண்டிய எந்தவொரு அதிகாரியிடமிருந்தும் பிணை வைப்புப் பணம் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உயர் நீதிமன்றத் தொகுதியில் ஆரம்பத்தில் இருந்து இதுவரையிலும் அதிகாரிகளால் பிணை வைக்கப்பட்டிருந்தமைக்கான சான்று இருக்கவில்லை. எதிர்காலத்தில் இதற்கான முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்தினை பெற்று சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | நிதிப்பிரமாணம் மற்றும் 2011 சனவரி 18 ஆந் திகதிய 01/2011 கொண்ட நீதி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிணை வைப்பு மேற்கொள்ளப் பட வேண்டும். |
| (ஆ) | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 ஆவது பிரிவு மற்றும் 2003 யூன் 02 | வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் மீளாய்வாண்டிற்கான சபையின் வருடாந்த அறிக்கையின் வரைபினை | சபையின் வரைபுகள் நிதிக்கூற்றுக்கள் பெற்றுக் கொடுக்கும் போது கொடுக்கப்பட்டுள்ளன என்பதனை அறியத் | செயற்பாட்டு திட்டத்திற்கு மேலதிகமாக வருடாந்த அறிக்கையின் வரைபினை |

| | | |
|---|---|---|
| ஆந் திகதிய இலக்கம் PED/12 கொண்ட பொது வியாபார சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | தருகின்றேன். | சமர்ப்பிக்கப் படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 7,066,939 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 16,101,438 தொகையாக இருந்தது. அதனால் நிதி விளைவுகளில் ரூபா 23,168,377 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு அரச மீண்டெழு கொடைகள் மற்றும் ஏனைய நடவடிக்கை வருமானங்களின் ஏற்றமும், ஊழியர் பணிக்குழு கிரயம் மற்றும் ஏனைய நடவடிக்கை கிரயம் குறைதலும் முக்கிய காரணிகளாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் இலக்கம் 470005718 கொண்ட மானியில் மின்சார கட்டணம் தாமதப்படுத்தி செலுத்தியமையினால் 2019 மற்றும் 2020 வருடங்களுக்காக தண்ட வட்டியாக ரூபா 371,894 செலுத்தப்பட்டிருந்தது. | திறைசேரியினால் பொதுவாக மாதாந்தம் வழங்கப்படும் மீண்டெழும் செலவினங்களுக்கான கட்டுநிதி அளவு ரூபா 6 ,000,000 ஆகம் மின்சாரத்தைத் தவிர்த்து ஏனைய மீண்டெழு செலவினங்களுக்காக ரூபா 3,000,000 அளவு செலவிடப்பட்டதன் மின்சார செலவுக்காக மீதிப் பணம் போதாமையினால் மாதாந்த மின்சார செலவினை செலுத்துகையில் வட்டிக்கான தொகையினையும் ஏற்க நேரும். ஆயினும், 2021 வருடத்திலிருந்து மின்சார பட்டியலினை முழுமையாக செலுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். | அரசுக்கு இழப்பு ஏற்படாத வண்ணம் நிதிக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.2 கருத்து வேறுபாட்டிற்கு இடமளிக்கும் கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு பதவி தொடர்பாக ஆரம்ப சம்பள அடியினைக்கு அப்பால் சம்பள ஏற்றமொன்றினை பெற்றுக்கொடுக்கப்பட்டு சம்பளம் கொடுக்கப்பட்டதன் காரணமாக ஓய்வு பெற்றுச் சென்ற அதிகாரி ஒருவரின் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த சம்பளம் மற்றும் அறவிடப்பட வேண்டிய முற்பணம் மொத்தமாக ரூபா 191,919 அறவிடப்பட இயலாது இருந்தது. | 2012.04.16 திகதி உயர் நீதிமன்ற முகாமைத்துவ முகாமையாளர் (நிதி) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஒருவருக்கு ஆரம்ப சம்பள அளவினைக்கு அப்பால் சம்பள ஏற்றம் கொடுக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்திக் கொண்டதன் காரணமாக முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் மற்றும் முகாமைத்துவ சபையின் ஆலோசனையின் படி கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த சம்பள ஏற்றத்தினை குறைக்கப்பட்டது. கூடுதலான சம்பள ஏற்றம் செலுத்தப்பட்டதன் காரணமாக கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள சம்பளத்தினையும் தவணைப் பணமாக அறவிடப்படுவதற்கு முகாமைத்துவ சபை தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், முகாமைத்துவ சபையின் தீர்மானப்படி 2017.07.18 திகதி முதல் சேவையினை முடிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 187,477.35 அறவிடப்படுவதற்கு இலக்கம் DMR/1532/2020 கொண்ட வழக்கினை மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த சம்பளம் மற்றும் அறவிடப்பட வேண்டிய முற்பணத்தினை அறவிடப் படுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டத்தினுள் அசுத்தம் மற்றும் சேவையினை பெற்றுக் கொள்வது தொடர்பாக பெறுகையினையில் உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சபையினால் தயாரிக்கப்படும் பெறுகை திட்டத்தினுள் மூலதன செலவுகள் மட்டும் உட்படுத்தப்படும். அசுத்தம் அகற்றும் சேவை நிறுவனத்தின் பொது காரியத்திற்கான செலவான படியினால் அது மீண்டெழும் செலவாகும். இதனால் அசுத்தம் அகற்றும் சேவையினை பெறுகை திட்டத்தினுள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. | சகலவித பொருட்களுக்கான சேவைகளுக்கான பெறுகைகளையும் பெறுகைத் திட்டத்தினுள் உட்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் 3.4.1 மற்றும் பெறுகை செயற் கோவையின் 2.14.1 க்கு முரணாக அசுத்தம் அகற்றும் சேவையின் வருடாந்த மதிப்பீடு ரூபா 06 மில்லியன் மீறப்பட்டுள்ள நிலையில் சந்தை விலையினை வழக்கமான முறையில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். | இதற்கு முன் இம்முறைமையினை இந்நிறுவனத்தில் அசுத்தம் அகற்றும் சேவைக்காக அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. விடயங்கள் அவ்வாறு இருக்கையில் 2020 வருடம் மார்ச் மாதம் நிலவிய கொரோனா தொற்று காரணமாக அக்காரியம் தவறிப் போய் உள்ளதுடன் மீதியாக இருந்த பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே அலுவல்களில் ஏற்பட்ட அவசர தேவை நிமித்தம் விலைமனு கோரலினை இதுவரை செய்து வந்த முறையிலேயே மேற்கொள்ள நேர்ந்தது. ஆயினும் எதிர்காலத்தில் முறையான பெறுகை வழிகாட்டலின் படி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | பெறுகை வழிகாட்டலுக்கு அமைய செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பெறுகைக் குழுவினால் அசுத்தம் அகற்றும் சேவைக்காக குறைந்த விலை மனுவினை சமர்ப்பிக்கப்பட்டிடிருந்த நிறுவனத்தினை அங்கீகரிக்கப் பட்டிருக்கையில் நிறுவனத்தின் முகாமைத்துவ சபையினால் முன்னைய வருடம் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்த விலைக்கே ஒப்பந்தத்தினை கையளிக்கப்பட்டிருந்த மையினால் பெறுகை முறைமையினைக்கு வருடத்திற்கு ரூபா 202,656 க்கான நிதிசார் இழப்பு ஏற்பட்டிருந்தது. | உயர்நீதிமன்றத் தொகுதியில் அசுத்தம் அகற்றும் சேவையினை முன்னெடுத்துச் செல்வதற்கு மீளாய்வாண்டில் பெறுகை நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட்டது. தற்போது அசுத்தம் அகற்றும் பணியினை மேற்கொள்ளும் நிறுவனத்தின் சேயினை தொடர்பாக மோசமான புகார் இருக்காமையினால் சென்ற வருட விலைக்கே சேவையினை மேற்கொண்டு செல்வதற்கான ஒப்பந்தத்தினை அந்நிறுவனத்திற்கே பெற்றுக் கொடுப்பதற்கு முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் 2020.09.10 திகதியன்று பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | பெறுகைக் குழு அங்கீகாரத்தின் படி செயற்பட வேண்டும். |